# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.152/2018

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாராயணன் | வா.சா.–1 | |
| த/பெ. | பெரியராமன் | | |
| கிராமம் | குறிஞ்சாங்குளம் | தொழில் | விவசாயி |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 64 |

---

முதல் விசாரணை 26–11–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 26.05.2006 ம் தேதிய எனக்கு சர்க்கரை வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் வீட்டிலிருப்பதாக வா.சா.1 கூறுகிறார்)

2) 03.12.2009 ம் தேதிய பட்டா எண்.369 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 16.04.2009 ம் தேதிய பட்டா எண்.369 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) வீட்டு வரி ரசீதுகள் எண்ணம் 2 அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 19.01.2017 ம் தேதிய மின்கட்டண ரசீதுகள் எண்ணம் 2 அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 27.08.2018 ம் தேதிய தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 27.08.2018 ம் தேதிய 1427 பசலிக்கான சாகுபடி கணக்கு உண்மை நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S